மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி உள்ளாட்சித் துறைக்கான கேள்வி இல்லை. உள்ளாட்சித் துறையில் இருக்கிற நடுநிலைப் பள்ளிகள் வரையிலும் உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆய்வுக்கூடம் என்பது உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

78—

மீன் இறங்குதளம்

***35806—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடமும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடமும், கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக நான் தொடர்ந்து வைத்த கோரிக்கையினை ஏற்றதற்கு நன்றி. பூம்புகார், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், மாவட்டத்தின் தலைநகருக்குச் செல்ல வேண்டுமென்றால், புதுச்சேரி மாநிலத்தைக் கடந்துதான் செல்ல வேண்டுமென்ற நிலையினை மாற்றி, நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து, மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு, புதிய மாவட்டம் தோற்றுவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என அறிவித்து, எங்கள் 3 தொகுதி மக்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கும் டெல்டா மக்களின் பாதுகாவலர், விவசாயிகளின் தோழர், கலியுகம் கண்ட இரண்டாம் கரிகாற்சோழன், மக்களின் முதல்வர், சேலத்துச் சிங்கம், கொங்கு நாட்டுத் தங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து நாயகன், காவேரி காப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், எங்கள் கோரிக்கையை நிறைவேற்ற உறுதுணையாக இருந்த ஜல்லிக்கட்டு நாயகன், தென்பாண்டிச் சிங்கம், தேனி தந்த சொக்கத் தங்கம், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன்* O.P.S. *அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன்* O.S.M. *அவர்களுக்கும் மற்றும் அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது சார்பாகவும், எனது பூம்புகார் தொகுதி மக்கள் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க என்னோடு இணைந்து போராடிய அன்புச் சகோதரர்கள், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி தொகுதி சட்டப்

பேரவை உறுப்பினர்களுக்கும், 3 தொகுதிகளையும் சார்ந்த வர்த்தகச் சங்கம், வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பூம்புகார் தொகுதிக்குட்பட்ட சந்திரப்பாடி மீனவர் கிராமம், ஏறக்குறைய 900 குடும்பங்களைச் சார்ந்த மீனவ மக்கள் வாழ்கின்ற கிராமம். அந்தக் கிராமம் காரைக்காலுக்கு அருகில் தனியாக இருக்கிறது. அங்கே செல்ல வேண்டுமானால் காரைக்காலை கடந்துதான் செல்ல வேண்டும். எனவே, அங்கே வசிக்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரமாக இருக்கின்ற முத்துக்காணை ஆற்றின் குறுக்கே மீன் இறங்குதளம் அமைக்க வேண்டும். மீனவர்கள், தாங்கள் கொண்டுவரும் மீன்களை இறக்குவதற்கு ஏதுவாக அந்த இறங்குதளத்தை அமைப்பது குறித்து மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்து, அதுகுறித்து ஆய்வு செய்து, அங்கு மீன் இறங்குதளம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், 18 மீனவக் கிராமங்களைக் கொண்ட தொகுதி. எங்கள் மீனவ மக்களுடைய கோரிக்கையை ஏற்று, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பூம்புகார் பகுதியில் ஒரு துறைமுகம்அமைக்கஉத்தரவிட்டு,தற்போதுமாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் தங்கள் கரங்களால் திறந்து வைக்கவிருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்தநாள் விழாவில் தரங்கம்பாடியில் மீன் இறங்குதளம் அமைத்திட அறிவிக்கப்பட்டு, அதற்காக ரூ.120 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் கோரும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்கள் கேட்டதையெல்லாம் செய்து கொடுக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எங்கள் தொகுதி மீனவ சமுதாய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற

காரணத்தினால், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: அதற்கு இவ்வளவா! (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பூம்புகார் பகுதியில் ரூ.178 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்க அறிவிக்கப்பட்டு, பணிகள் நிறைவு பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார்கள்; அது அவருடைய தொகுதியில்தான். அதன்பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில், தரங்கம்பாடியில் ரூ.132 கோடியில் மீன் இறங்குதளம் அமைக்க உத்தரவிட்டு, மத்திய அரசின் நிதியுதவி கோரி, நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, தற்பொழுது அரசாணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தரங்கம்பாடிக்கும், சந்திரப்பாடிக்கும் இடையில் 8 கி.மீ. இடைவெளிதான் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 8 கிலோ மீட்டர் தொலைவு செல்லாமல், அந்த இடத்திலிருந்து காரைக்கால் பகுதிக்குத்தான் செல்கிறோம் என்கிறார்கள். காரைக்காலுக்குச் செல்ல வேண்டாம் என்பதால்தான் நம்முடைய மாநிலத்திலேயே சந்திரப்பாடியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள தரங்கம்பாடியில் ரூ.132 கோடி செலவில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அங்கே 126 விசைப் படகுகளும், 180 நாட்டுப் படகுகளும் இயக்கப்படுகின்றன. அதாவது, பாரம்பரிய மீனவர்கள், Fibre Reinforced Plastic என்று சொல்லக்கூடிய கட்டுமரங்களை உபயோகப்படுத்துகிறார்கள். 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தரங்கம்பாடி

மீன் இறங்குதளத்தை இவர்கள் ஏன் use செய்யக் கூடாது? எனவே, சந்திரப்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேற்கொண்டு தேவைப்பட்டால், future-ல் பார்த்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு அந்த ஊரைப் பற்றித் தெரியும். காரைக்காலைக் கடந்து, 2 கிலோ மீட்டர் தூரம் ஊருக்குள்ளே சென்றுதான் சந்திரப்பாடிக்கே செல்ல முடியும். அங்கு சின்னூர்பேட்டை என்ற மற்றொரு கிராமமும் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் 180 குடும்பங்கள் இருக்கின்றன. அங்கு செல்ல வேண்டுமென்றாலும் 6 கிலோ மீட்டர் தூரம் காரைக்கால் பகுதியைக் கடந்துதான் போக வேண்டும். கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சந்திரப்பாடி கிராமத்திற்கு தண்ணீரைக் கொண்டு செல்ல, அந்த 2 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். அவர்களிடம் permission கேட்டுத்தான் அங்கு pipe line போடப்பட்டிருக்கிறது. எனவே, அங்கு இத்தகைய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அங்கு வசிக்கின்ற மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டுமானாலும், பிடித்த மீன்களை விற்பதற்கும் காரைக்காலைக் கடந்துதான் செல்ல வேண்டும். எனவே, அங்கு ஒரு மீன் இறங்குதளம் அமைத்துத் தர வேண்டும். அந்த முகத்துவாரத்தில் முத்துக்காணை என்கிற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் முகத்துவாரத்தைத் தூர் வாரிக் கொடுக்க வேண்டும். அங்கே 300 FRP boats-ம், 16 பெரிய படகுகளும் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற 900 குடும்பங்களில் 800 குடும்பங்கள் மீனவ சமுதாயக் குடும்பங்கள்தான். இவை அனைத்துமே மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அவர்கள் இதுகுறித்து பரிசீலனை செய்து, தனிக் கவனம் செலுத்தி, இந்த நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையிலேயே அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்னொரு கோரிக்கை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் நாகப்பட்டினம்

2020 மார்ச் 12]

மாவட்டத்திற்கு மட்டும் மீனவ மக்களின் கோரிக்கையினை நிறைவேற்ற ரூ.452 கோடி அளவிற்கு மீன் வளத் துறைக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சமந்தான்பேட்டையில் உள்ள மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கப்படும் என்று நம்மைவிட்டுப் பிரிந்தாலும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110–ன்கீழ் அறிவித்திருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலனை செய்து அதையும் நிறைவேற்றித் தருவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்காலும் இந்தியாவில்தான் இருக்கிறது. அது* foreign country *கிடையாது. எனவே, அதைக் கடந்து போவதில் ஒரு பிரச்சினையும் இல்லை. இருந்தாலும், 8 கிலோ மீட்டர் போவதில் என்ன கஷ்டம் என்றே தெரியவில்லை? எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக நாம் என்ன செய்திருக்கிறோமென்றால், நம்முடைய உள்நாட்டு மீனவர்களுடைய அடிப்படை கட்டமைப்பு வசதிகள், அதேபோன்று, ஒரு கோடி ரூபாய் செலவில் கடலோர மாவட்ட மீனவர்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள், தங்கு தளங்கள், மீன் வலை பின்னும் கூடம், ஏலக்கூடம் போன்ற பல்வேறு வசதிகள் செய்து தர வேண்டுமென்பது குறித்து அரசுக்கு அறிவுரை வழங்குவதற்காக* Consultants *நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, அந்த* report*–ல் 100*

[2020 மார்ச் 12

சதவிகிதம் இவையெல்லாம் வருமென்று நினைக்கிறேன். கண்டிப்பாக வரும்; வரும்போது கண்டிப்பாகச் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதி, இனிகோ நகர் கடற்கரைப் பகுதியில் கடலரிப்பு மிக அதிகமாக உள்ளது. மீனவர்களுடைய குடியிருப்புகளுக்கும், அவர்களுடைய படகுகளுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. கடலரிப்பினால் படகுகள் ஒன்றோடொன்று மோதி அவை சேதமடைகிற நிலையில் உள்ளன. மேலும், இனிகோ நகர் கடற்கரைப் பகுதியில் கடலரிப்பைத் தடுத்திட தடுப்புச் சுவர் கட்டித் தந்து, மீனவர்களின் குடியிருப்புகளுக்கும், படகுகளுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், திரேஸ்புரம் கடற்கரையில் ஏற்கெனவே அமைந்துள்ள தூண்டில் வளைவினை நீட்டித்துத் தருமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Anti-Sea Erosion Wing என்று கடலரிப்பைத் தடுக்கின்ற ஒரு Wing PWD-ன் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. எனவே, கடலரிப்பையெல்லாம் PWD கவனத்தில்கொள்ளும். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதேபோன்று, வளைவுகளை நீட்டிப்பது என்பது மீன் வளத் துறை செய்கின்ற பணி. அதை ஆய்வு செய்து, viability, அதாவது, feasibility இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

2020 மார்ச் 12]

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது செய்யூர் தொகுதியானது சற்றேறக்குறைய 16 மீனவக் கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. மிகவும் ஏழையெளிய மீனவர்கள் வசிக்கக்கூடிய பகுதியாகும். ஆதலால், அந்தப் பகுதியில் வாழ்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குகின்ற வகையிலே, ஒரு மீன் இறங்குதளம் அமைக்க வேண்டும். அதேபோல, ஆண்டுதோறும் அந்தப் பகுதியிலே அதிகமாக கடலரிப்பு ஏற்பட்டவண்ணம் இருப்பதால், அவர்களுடைய வாழ்வாதாரமான படகுகள் மற்றும் வீடுகளெல்லாம் சேதமடைந்து விடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அதேபோல, இந்த நேரத்திலே அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது விற்கப்படுகின்ற மீன்களெல்லாம்* formalin *என்ற ஒரு* preservative-*ஐப் பயன்படுத்தி விற்கப்படுவதாக ஒரு தகவல் வந்துள்ளது. அதனை அரசு கூர்ந்து கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, கடலரிப்பு ஏற்படுவதால் மீனவக் கிராமங்கள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. அதேபோன்று, தங்கு தளம் அமைப்பது குறித்து நிதிநிலைக்கேற்ப ஒவ்வோர் ஆண்டும் நாம் அறிவித்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பது ஒன்று. இரண்டாவதாக,* formalin *கிடையாது. அதனால் கண்டிப்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஒரு வதந்தியைப் பரப்பிவிட்டிருக்கிறார்கள். எல்லா அளவிலும் நம்முடைய சுகாதாரத் துறையும், உணவுத் துறையும் மீன் வளத் துறையுடன்*

இணைந்து எங்கெல்லாம் end point sales இருக்கிறதோ, அங்கெல்லாம் check செய்து தரமான மீன்களைத்தான் கொடுக்கிறார்கள். அதனால் வீண் வதந்தியைக் கண்டிப்பாக நம்பத் தேவையில்லை. வெளி மாநிலங்களிலிருந்து வருகிற மீன்கள், பொதுவாக மதுரையிலிருந்து transportation செய்யப்பட்டு, வருகின்ற வழியில் 2, 3 நாட்கள் ஆவதால் அது கெட்டுப்போகிற நிலை இருக்கிறது. அதை seize செய்து, மார்க்கெட்டில் விற்காத அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அதைத்தான் ஊடகங்களில் formalin என்று பெரிய அளவில் விளம்பரப்படுத்தினார்கள். அது formalin கிடையாது. எந்த அமிலமும் கிடையாது. மீனை தைரியமாகச் சாப்பிடுங்கள். மீனைச் சாப்பிட்டால் கண்டிப்பாக நீங்கள் 100 வருடங்கள் நீண்ட ஆயுளோடு வாழலாம், வாழ்த்துகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

79—

மகளிர் தங்கும் விடுதி

***38457—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை–செம்மேடு பகுதியில் மகளிர் தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*